© பதிப்புரிமையுடையது

சுட்டெண்: | | | | | | | | |

# Institute of Certified Management Accountants of Sri Lanka

## ஆரம்ப மட்டம் (Foundation Level)

## நவம்பர் 2015 பரீட்சை

**பரீட்சைத் திகதி :** 22 நவம்பர் 2015 **பக்கங்களின் எண்ணிக்கை :** 08

**பரீட்சை நேரம் :** 1.30 பி.ப – 3.30 பி.ப **வினாக்களின் எண்ணிக்கை :** 50

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

1. அனுமதிக்கப்பட்ட காலம்: **இரண்டு (2) மணித்தியாலம்**.
2. மொத்தம்: **100 புள்ளிகள்.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
4. அறிவுறுத்தியவாறு உமது **சுட்டெண்ணை** வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் எழுதுக. பரீட்சை முடிவில் பக்கங்களை ஒழுங்காக இணைத்து மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கவும.
5. **உமது விடைகளை வினாத்தாளிலேயே குறித்துக் காட்டுக.** வினாத்தாளை / வேலைத் தாள்களை **பரீட்சை மண்டபத்திற்கு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.**
6. **பல்தேர்வு வினாக்களுக்கு** சரியான விடையின் எழுத்தைச் சுற்றி **வட்டமிட்டுக் காட்டுக**.
7. பிரிவு **A**: வியாபாரப் பொருளியல்; பிரிவு **B**: வியாபார நிதி அடிப்படைகள்

| பாடம் | பாடக் குறியீடு |
|---|---|
| **வியாபார பொருளியலும் வியாபார நிதி அடிப்படைகளும்**<br>**Business Economics & Business Finance Fundamentals** | **(BEF / FL 5 - 105)** |

---

## பிரிவு A: வியாபாரப் பொருளியல்

(1) பொருளியற் கற்கை அவசியமாவதற்குக் காரணம் காரணம்:

(i) மனிதத் தேவைகளுடன் ஒப்பிடுகையில் வளப்பற்றாக்குறை காணப்படுதல்.
(ii) மனிதர்கள் சிக்கலான சமுதாயத்தில் வாழ்தல்.
(iii) மனிதத் தேவைகள் எல்லையற்றவையாக இருத்தல்.
(iv) மக்கள் பரந்து வாழ்தல்.

மேலே தரப்பட்டுள்ளனவற்றுள் சரியானவை எவை?

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்
(b) (i), (ii) மற்றும் (iii) மாத்திரம்
(c) (i), (ii) மற்றும் (iv) மாத்திரம்
(d) (ii) மற்றும் (iv) மாத்திரம்

(2) கீழுள்ள நிரம்பல் வளையி உற்பத்தியினூடாக சென்றால் அதன் நெகிழ்தகவு (elasticity) என்ன?




(a) பூஜ்யம்.
(b) முடிவிலி.
(c) ஒன்று.
(d) இரண்டு.

(3) எதனை மேம்படுத்துவதற்கு திறன் பொருட்கள் (Merit Goods) அவசியமாகின்றன.
- (a) வளங்களின் பயன்பாட்டினை (Utilization of resources).
- (b) வளங்களின் வினைத்திறனை (Efficiency of resources).
- (c) கல்வி மற்றும் உடல்நலப் பராமிப்புடன் வாழ்க்கைத் தரத்தினை (Quality of life)
- (d) மனிதர்களின் கொள்வனவு வலுவினை (Purchasing power)

(4) இடமிருந்து வலமாக கீழ்நோக்கிச் சாயும் கேள்வி வளையி எதனைக் குறிக்கின்றது.
- (a) நிறை நெகிழ்ச்சி (perfectly elastic) கேள்வி வளையி.
- (b) நிறை நெகிழ்ச்சியற்ற (perfectly inelastic) கேள்வி வளையி.
- (c) தரங்குறைந்த பொருட்களுக்கான (inferior goods) கேள்வி.
- (d) சாதாரண பொருட்களுக்கான கேள்வி.

(5) கீழேயுள்ள வரைபடம் விவசாயப் பொருட்களின் அடிமட்டத் தொக்குத் திட்டத்தினை (buffer stock scheme) காட்டுகின்றது. குறைவான அறுவடை காலத்தில் ஸ்திரநிலை காட்டும் விலை எது?




(a) $P_1$ (b) P (c) $P_2$ (d) D

(6) நெகிழ்ச்சி நேராகவும் மறையாகவும் இருப்பது முறையே:
- (a) போட்டிப் பொருட்களும் (competitive goods) இணைந்த பொருட்களும் (complimentary goods)
- (b) சாதாரண (normal) பொருட்களும் தரங்குறைந்த (inferior) பொருட்களும்.
- (c) ஆடம்பரப் பொருட்களும் தரங்குறைந்த பொருட்களும்.
- (d) கோழி இறைச்சியும் மாட்டு இறைச்சியும்

(7) நேரில் வரிகள் விரும்பப்படாமைக்குக் காரணம் மக்களுக்கு அதுபற்றி தெரியாதிருப்பதுடன்,
- (a) அதிக வளர்ச்சிவிகிதம் கொண்டும் பணக்காரரின் சுமையை குறைப்பதனாலும் ஆகும்.
- (b) அதிக தேய்வுவிகிதம் கொண்டும் பணக்காரரின் சுமையை அதிகரிப்பதனாலும் ஆகும்.
- (c) அதிக வளர்ச்சிவிகிதம் கொண்டும் பெட்ரோலிய பொருட்கள் விலையை குறைப்பதனாலும் ஆகும்.
- (d) அதிக தேய்வுவிகிதம் கொண்டும் வரிவிலக்குகளை (tax exemption) அதிகரிப்பதனாலும் ஆகும்.

(8) நேரில் வரியானது நேர் வரியிலிருந்தும் வேறுபடுவது;
- (a) வரியை செலுத்துபவர் வரிச்சுமையை தாங்கவேண்டி இருப்பதனால்.
- (b) வரியை செலுத்துபவர் அரசாங்கத்திற்கு வருமானம் உழைப்பவராக இருப்பதனால்.
- (c) வரியை செலுத்துபவர் வரிச்சுமையை வேறுநபருக்கு மாற்றக்கூடியதாக இருப்பதனால்.
- (d) இந்த வரிகளுக்கு மக்களிடம் வரவேற்பு இல்லாமையினால்.

(9) விவசாயி ஒருவரின் வருமானத்தை ஸ்திரப்படுத்துவதற்கு சிறந்த வழி;
- (a) பரவளையி கேள்வி வளையியை (hyperbola demand curve) நன்கு பொருந்தச் செய்தல்.
- (b) உத்தரவாத விலைத் திட்டத்தினை தொழிற்படுத்துதல்
- (c) அவர்களுக்கு வருமான உதவி ( income support) அளித்தல்.
- (d) மானியங்கள் (subsidies) வழங்குதல்.

(10) நிறைபோட்டிச் சந்தையொன்றில் பொருள் எவ்வாறு இருக்கும்?
- (a) பேதப்படுத்தப்பட்டதாக (differentiated).
- (b) ஆக்க உரிமைகள் (patent rights) கொண்டதாக.
- (c) அழியக்கூடியதாகவும் (perishable) களஞ்சியப்படுத்த முடியாததாக.
- (d) ஒரே இனத்ததாக (homogeneous).

(11) கீழுள்ள, அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றின் சனத்தொகைப் பிரமிட் எதனை காட்டுகின்றது?




- (a) உயர்ந்த பிறப்பு வீதமும் உயர்ந்த மரண வீதமும்
- (b) குறைவான பிறப்பு வீதமும் குறைவான மரண வீதமும்
- (c) குறைவான தங்கியிருப்போர் (dependency) வீதம்.
- (d) உயர்ந்த தங்கியிருப்போர் வீதம்

(12) கார் நிறுவனங்கள் இரண்டு ஒருங்கிணைவது எதற்கு உதாரமமாகும்?
- (a) கிடையான ஒருங்கிணைவு (Horizontal integration)
- (b) நிலையான ஒருங்கிணைவு (Vertical integration)
- (c) பக்கவாட்டு ஒருங்கிணைவு (Lateral integration)
- (d) ஒன்றுசேர்த்தல் (amalgamation)

(13) அரசாங்கம் பாரிய வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை கொண்டிருந்து, அதன் செலவினம் வருமானத்தை விட அதிகமாக இருக்கும்போது அது கடைப்பிடிக்கக்கூடிய வழி எது?
- (a) பொருளாதார முகாமைத்துவத்திற்கான நாணயக் கொள்கை (Monetary policy).
- (b) பொருளாதார முகாமைத்துவத்திற்கான இறைவரிக் கொள்கை (Fiscal policy)
- (c) பொருளாதார முகாமைத்துவத்திற்கான நாணயமாற்று விகிதக் கொள்கை (Exchange rate policy)
- (d) பொருளாதார முகாமைத்துவத்திற்கான வழங்கற் பக்கக் கொள்கை (Supply-side policy).

(14) வழங்கற்பக்கக் கொள்கைகள் பேரண்டப்பொருளியற் குறிக்கோள்களை அடைவதற்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன், அவை பயன்படுத்துவது;
- (a) தனியார்மயப்படுத்தலும், ஒழுங்குமுறை விலக்கலும் (Privatization and Deregulation)
- (b) உட்செலுத்துகைகளும் கசிவுகளும் (Injections and leakages)
- (c) மொத்தக் கேள்வி (Aggregate demand)
- (d) மொத்த வழங்கல் (Aggregate supply)

(15) BRIC கீழ்வரும் எந்தக் குழுமத்தால் தாபிக்கப்பட்டது?
- (a) ரஷஇயா, இந்தியா, UK மற்றும் USA
- (b) பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா
- (c) USA, பிரேசில், ரஷ்யா, மற்றும் UK
- (d) சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும USA

(16) பணவீக்கம் எந்த மூன்று பிரதான காரணங்களால் ஏற்படுகின்றது?
- (a) கேள்வி இழுப்பு (Demand pull), கிரய உதைப்பு (cost push) மற்றும் பணநிரம்பல் விரிவாக்கம்
- (b) பணநிரம்பல் விரிவாக்கம், மொத்தக் கேள்வியில் அதிகரிப்பு, வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை.
- (c) மொத்தக் கேள்வியில் அதிகரிப்பு, மொத்த நிரம்பலில் அதிகரிப்பு மற்றும் பணநிரம்பலில் அதிகரிப்பு
- (d) கிரய உதைப்பு, மொத்தக் கேள்வியில் அதிகரிப்பு, மொத்த நிரம்பலில் அதிகரிப்பு.

(17) உட்செலுத்துகையில் அதிகரிப்பு (increase in Injections) எதனை விளைவிக்கும்.
- (a) வேலை வாய்ப்பில் அதிகரிப்பு.
- (b) பொருட்கள், சேவைகளுக்கான கேள்வியில் அதிகரிப்பு
- (c) மேல்நோக்கிய பெருக்கிச் செயன்முறை (upward multiplier process).
- (d) மூலப்பொருட்களுக்கான கேள்வியில் அதிகரிப்பு

(18) இலங்கையின் பல்தேசிய கம்பனிகள் நாட்டிற்குவெளியில் அனுப்பும் இலாபங்கள் பதிவுசெய்யப்படுவது;
- (a) சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில்
- (b) சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கில்
- (c) சென்மதி நிலுவையின் சேவைகள் கணக்கில்
- (d) சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கில்

(19) இலங்கையில் மிதப்பு நாணயமாற்று விகித முறைமை பயனுள்ளதாக இருப்பதற்குக் காரணம்:
- (a) சுயமாக செம்மையாக்கி சரியான நிலையை காட்டுவதனால்
- (b) அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுவதனால்
- (c) சர்வதே நாணய நிதியத்தினால் (IMF) ஆக்கப்படுவதனால். .
- (d) ரூபாவின் கொள்வனவு வலுவினால் (purchasing power) தீர்மானிக்கப்படுவதனால்.

(20) சர்வதேசச் சந்தையில் மிகுந்த போட்டியிடும் தன்மையை கொண்டிருப்பதற்கு ஒரு நாடு;
- (a) நாணயப் பெறுமதியை அதிகரிக்கும் (Appreciate the currency).
- (b) நாணப் பெறுமதியை வீழ்ச்சியுறச் செய்யும். (Depreciate the currency).
- (c) அதிக அளவில (large scale) உற்பத்தி செய்யும்.
- (d) கைத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

(21) பணத்தின் சுற்றுப்பாய்வில் உட்செலுத்துகைகளாவன (Injections):
- (a) ஏற்றுமதிகள், முதலீடுகள், அரச செலவினம்
- (b) இறக்குமதிகள், சேமிப்புக்கள், வரிகள்
- (c) முதலீடுகள், வரிகள், ஏற்றுமதிகள்
- (d) அரச செலவினம், கடன்படுகைகள், வரிகள்

(22) மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) மொத்த தேசிய உற்பத்தியாக (GNP) மாற்றுவதற்கு:
- (a) காரணி விலையும் சந்தை விலையும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.
- (b) வெளிநாட்டிலிருந்து நிகர ஆதன வருமானம் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.
- (c) தேய்மானம் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.
- (d) மூடிய பொருளாதாரம் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

(23) சர்வதேச அளவுத்திட்டத்தில் தொழிற்தேர்ச்சி மற்றும் வேலைப் பிரிவு (division of labour) இடம்பெறுவது:
- (a) ஒரு நாட்டில் மூலப்பொருட்கள் மலிவாகக் கிடைத்தால்
- (b) ஒரு நாட்டில் கூலி வீதங்கள் குறைவானவையாக இருப்பின்
- (c) ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாட்டின்படி
- (d) ஒரு நாட்டில் பெற்றோலியப் பொருட்களின் விலைகள் குறைவானவையாக இருப்பின்

(24) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் முழுமையாக தங்கியிருப்பது:
- (a) விவசாயம், மீன்பிடி, சுரங்கத்தொழில், ஆரம்ப கைத்தொழிற்துறை
- (b) இரண்டாந்தர கைத்தொழில் மற்றும் நிருமானத்துறை.
- (c) சுற்றுலா, வங்கி, காப்புறுதி மற்றும் மூன்றாம் தரநிலையின் அத்தகைய சேவைத் துறைகள்
- (d) நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் துறைகள்

(25) பிரசித்தமான நிரம்பற்பக்க கொள்கைகள் (Supply-side policies) கடைப்பிடிப்பது:
- (a) கேள்வி முகாமைத்துவம் மற்றும் இறைவரிக் கொள்கை (fiscal policy).
- (b) மொத்த நிரம்பல் (Aggregate supply) மற்றும் நாணயக் கொள்கை
- (c) நாணயமாற்று வீத கொள்கைகள்
- (d) பணவீக்க எதிர்ப்புக் கொள்கைகள் (Anti-inflationary policies).

(26) ஏக உரிமைப்போட்டி (monopolistic Competition) மற்றும் நிறைபோட்டி இரண்டும் மிகவும் ஒத்த சந்தைக் கட்டமைப்புக்களாகும். எனினும், அங்கு காணக்கூடிய ஒரு வேறுபாடு:
- (a) பிரதியீட்டுப் பொருட்களை (Substitute Goods) விற்பனை செய்தல்
- (b) திறன் பொருட்களை (Merit Goods) விற்பனை செய்தல்.
- (c) ஒரேவிதமான பொருட்களை (Identical Goods) விற்பனை செய்தல் .
- (d) பாகுபடுத்தப்பட்ட (Differentiated), உற்பத்திக்குறியிட்ட (Branded) பொருட்களை விற்பனைசெய்தல்.

(27) பேரண்டப் பொருளியலின் (Macro-economic) நோக்கங்கள்.
- (a) பொருளாதார வளர்ச்சி, தொழில்வாய்ப்பு, அதிகளவில் சமமான வருமானப் பகிர்வு.
- (b) பணவீக்கக் கட்டுப்பாடு, சென்மதி நிலுவைச் சமநிலை, ஏற்றுமதி வருமானம்.
- (c) பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம், காப்பு (conservation).
- (d) தொழில்வாய்ப்பு, பணவீக்கக் கட்டுப்பாடு, சென்மதி நிலுவைச் சமநிலை.

(28) கீழ்நோக்கிய திரும்பலான பொருளியல் மந்தநிலையின் அதிக சாத்தியமான இலட்சணங்கள்
- (a) உற்பத்திக் குறைவு, வீழ்ச்சியடையும் விலைகள், உயர்மட்ட வேலையில்லாத் திண்டாட்டம்
- (b) அதிகரித்த உற்பத்தி, அதிகரிக்கும் விலைகள், குறைந்தமட்ட வேலையில்லாத் திண்டாட்டம்
- (c) அபிவிருத்தியடைந்த நாடுகளில் வியாபாரச் சக்கரத்தின் (trade cycle) பகுதியாக
- (d) அபிவிருத்தியடைந்த நாடுகளில் கட்டமைப்புப் பலவீனங்களின் (structural weakness) காரணமாக.

(29) “கொழும்பு துறைமுக நகர்த் திட்டம் கரையோரங்களை பாதிப்பது சாத்தியம்”. இது;
- (a) ஒரு நேர் கூற்று (positive statement)
- (b) ஒரு நெறியியற் கூற்று (normative statement)
- (c) ஒரு தேவையற்ற செலவினமாக கருதப்படும்.
- (d) எந்தவொரு உண்மை அடிப்படையும் இல்லாத கூற்று.

(30) ஐரோப்பிய ஒன்றியம் (European Union) ஒரு பொருளாதார ஒன்றியமாக கருதப்படுவதற்கு காரணம்:
- (a) அங்கத்துவ மற்றும் அங்கத்துவமற்ற நாடுகளுடன் சுதந்திர வர்த்தகம் (free trade).
- (b) உற்பத்திக் காரணிகளின் சுதந்திரமான இடம்பெயர்வு (Free movement)
- (c) பொதுவான நாணயமும் பொதுவான மத்திய வங்கியும் இருத்தல்.
- (d) பெரிய சந்தையும் பொதுவான கொள்கைகளும் இருத்தல்.

(31) ஏதன்மூலம் மொத்த தேசிய வருமானம் (GNI) நிகர தேசிய வருமானமாக (NNI) மாற்றப்படலாம்?
- (a) வெளிநாட்டிலிருந்தான வருமானத்தை கூட்டுவதன் மூலம்.
- (b) தேய்மானத்தை நீக்குவதன்மூலம்
- (c) நேரில் வரிகளைக் கூட்டி, மானியங்களை கழிப்பதன்மூலம்.
- (d) ஒரு திறந்த பொருளாதாரத்தை ஏற்படுத்துவதன்மூலம்.

(32) பொருளாதார வளர்ச்சியினை எதனால் விளக்குவது சாத்தியம்?
- (a) உற்பத்திச் சாத்திய வளையியை வெளிநோக்கி நகர்த்துவதால்.
- (b) உற்பத்திச் சாத்திய வளையியை உள்நோக்கி நகர்த்துவதால்.
- (c) உற்பத்திச் சாத்திய வளையிக்கு உள்ளேயுள்ள ஒரு புள்ளியினால்.
- (d) உற்பத்திச் சாத்திய வளையிக்கு வெளியேயுள்ள ஒரு புள்ளியினால்.

(33) பெருந்தெருக்கள் ஒரு நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்தினாலும், பல வெளிவாரிக் கிரயங்களை விளைவிக்கும்;
- (i) வரட்சிக்கு வழிவகுக்கலாம். .
- (ii) மனிதக் குடியேற்றங்களை இல்லாமற் செய்யும்.
- (iii) தாவரங்கள், பூச்சிபுழுக்கள், மற்றும் பறவைகளின் வாழ்க்கையை அழிவுறச்செய்யும்.
- (iv) நாட்டுக்கு பாரிய நிதிச் சுமையை ஏற்படுத்தும்.

- (a) (ii) மாத்திரம்
- (b) (ii) மற்றும் (iii) மாத்திரம்
- (c) (i), (ii) மற்றும் (iii) மாத்திரம்
- (d) (ii), (iii) மற்றும் (iv) மாத்திரம்

(34) 2015 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இலங்கையின் பணவீக்கம் மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது.
- (a) அது 10% ஆக இருந்தது.
- (b) அது 1% ஆக இருந்தது.
- (c) அது 0.1% ஆக இருந்தது.
- (d) அது 5% ஆக இருந்தது.

(35) கொழும்பு நகரை அழகாக்குவது எதனை **ஏற்படுத்தாது**?
- (a) மேல்நோக்கிய பெருக்கித் தாக்கம் (multiplier effect)
- (b) வருமானத்தில் அதிகரிப்பு.
- (c) வரி வருமானத்தில் அதிகரிப்பு
- (d) வாழ்க்கைச் செலவில் வீழ்ச்சி

## பிரிவு B: வியாபார நிதி அடிப்படைகள்

(36) இலாபத்தை உச்சப்படுத்துதல் பங்குவிலையை உச்சப்படுத்த பங்களிப்பு செய்யாற்போகலாம். காரணம்:
- (a) இலாபம் பணத்தின் காலப்பெறுமதியை கணக்கிற் கொள்வதில்லை.
- (b) இலாபம், இடர் மற்றும் வருமானத்திற்கு இடையிலான சமநிலையை கவனத்திற் கொள்வதில்லை.
- (c) இலாபம், காசுப்பாய்வுகளை கவனத்திற் கொள்வதில்லை.
- (d) இலாபமானது காசுப்பாய்வுகள், இடர், வருமானம், காலக்காரணிகளை கவனத்திற் கொள்வதில்லை

(37) கீழ்வருவனவற்றுள் நிதிச்சாதனம் அல்லாதது எது?
- (a) நிதிக் குத்தகை
- (b) விலைச் சுட்டி (Price index)
- (c) தனிச்சம் (Debenture)
- (d) வைப்பு (Deposit)

(38) “தினசரி கொடுப்பனவுகளை மேற்கொள்ள எவ்வளவு பணம் தேவை?” எனும் வினாவுக்கு சிறந்த விடை தருவது எந்த நிதி முகாமைத்துவ தீர்மானத்தின் கீழ்?
- (a) மூலதனப் பாதீட்டுத் தீர்மானங்கள் (Capital Budgeting decisions)
- (b) மூலதன கட்டமைப்புத் தீர்மானங்கள் (Capital Structure decisions)
- (c) செயற்படு மூலதன முகாமைத்துவ தீர்மானங்கள் (Working Capital Management decisions)
- (d) பொருளாதார பெறுமதிசேர் தீர்மானங்கள் (Economic Value Added decisions)

(39) இலங்கை மத்திய வங்கி மூன்று பரந்த தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது: பிரதான தொழிற்பாடுகள், பிரதான தொழிற்பாடுகளுக்கு இணைந்த தொழிற்பாடுகள் (Ancillary functions), மற்றும் முகவராண்மைத் தொழிற்பாடுகள். கீழ்வருவனவற்றுள் பிரதான தொழிற்பாடுகளுக்கு இணைந்த தொழிற்பாடுகள் எது?
- (a) நாணய வழங்கலும் முகாமையும் (Currency Issue & Management)
- (b) மாகாண அலுவலகங்களை கண்காணித்தல் (Monitoring)
- (c) நிதி உளவுபார்த்தல் (Financial Intelligence)
- (d) ஊழியர் சேமலாப நிதிய முகாமைத்துவம்.

(40) கீழ்வரும் கூற்றுக்களுள் <u>சரியானவை</u> எவை?
- (i) பதிலிப் போர் (Proxy fight) என்பது திருப்தியற்ற பங்குதாரர்கள் தற்போதைய முகாமையை மாற்றுவதற்கு மேற்கொள்ளும் பொறிமுறையாகும்.
- (ii) புதிலி வாக்கு (Proxy vote) என்பது முகாமையின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக ஒருவரினால் அளிக்கப்படும் வாக்கு ஆகும்.
- (iii) வினைத்திறனற்று முகாமைசெய்யப்படும் கம்பனிகள் சுவீகரிப்பிற்கு (takeovers / acquisitions) ஆளாவதில்லை.
- (iv) செல்வத்தை உச்சப்படுத்துவதற்கு நிதிமுகாமையாளர் நிறுவனத்தின் எதிர்பார்க்கப்படும் சகல காசு உட்பாய்வுகளின் இற்றைப் பெறுமதியினை உச்சப்படுத்துதல் வேண்டும்.

- (a) (i) மாத்திரம்
- (b) (ii) மற்றும் (iii) மாத்திரம்
- (c) (i), (ii) மற்றும் (iii) மாத்திரம்
- (d) (iii) மற்றும் (iv) மாத்திரம்

(41) கீழ்வருவனவற்றில் சரியான கூற்றினை தெரிவுசெய்க.
- (a) ஆண்டுத்தொகை என்பது “முடிவில்லாத காலத்திற்கு சமனான அல்லது மாறாத தொகையின்” ஒரு தொடர்ச்சியான கொடுப்பனவாகும்.
- (b) சாதாரண ஆண்டுத்தொகை (Ordinary annuity) என்பது ஒவ்வொரு காலத்தின் ஆரம்பத்திலும் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான சமனான கொடுப்பனவுகள் ஆகும்.
- (c) முடிவில்லாக் கொடுப்பனவுகள் (Perpetuities) என்பது ஏப்போதும் கிரமமாக மேற்கொள்ளப்படும் சமனற்ற தொடர் கொடுப்பனவுகளாகும்.
- (d) வருமதியாகவுள்ள ஆண்டுத்தொகை (Annuity Due) என்பது, காலத்தின் இறுதியில் அல்லாது உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய ஆண்டுத்தொகை ஆகும்.

(42) கீழ்வரும் கூற்றுக்களுள் **<u>தவறான</u>** கூற்றுக்கள் எவை?

(i) திறைசேரி உண்டியல்கள் பூஜ்யக் கூப்பனைக் கொண்ட அரசாங்க காப்பாவணங்களாகும்.

(ii) வர்த்தகத் தாள்கள் வழமையாக கழிவுக்கு விற்கப்படுவதுடன், சில வட்டியினை கொண்டவை.

(iii) கம்பனிகள் பிணைமுறிச் சந்தை தனிப்பட்ட செலவுகளுக்கு குறுங்கால நிதியளிப்பை வழங்கும்.

(iv) குறித்த சொத்தினை காப்பாகவைத்து வழங்கப்படும் கம்பனிப் பிணைமுறிகள் தனிச்சங்கள் ஆகும்.

(a) (i) மற்றும் (ii) மாத்திரம்

(b) (iii) மற்றும் (iv) மாத்திரம்

(c) (ii), (iii) மற்றும் (iv) மாத்திரம்

(d) தரப்பட்டுள்ள எல்லாம்

(43) கீழ்வரும் கூற்றுக்களுள் **<u>தவறான</u>** கூற்று எது?

(a) முதலீட்டுத் தொகுதி இடரானது ஒவ்வொரு தனினத்தனி காப்பாவண இடரின் நிறையேற்றுச் சராசரியாகும்.

(b) தனித்தனி காப்பாவணங்களிடையே இணைவு எவ்வளவு குறைவானதோ அந்த அளவுக்கு இடர் குறைப்பிற்கான சாத்தியம் அதிகமாகும்.

(c) பல்துறைப்படுத்தல் (diversification) மூலம் அடையக்கூடிய இடர் குறைப்பு மட்டம் முதலீட்டுத் தொகுதியிலுள்ள காப்பாவணங்களுக்கு இடையிலான இணைவு (correlation) மட்டத்தில் தங்கியுள்ளது.

(d) இரண்டு காப்பாவணங்களைகொண்ட முதலீட்டுத் தொகுதியின் இடர் மட்டம் ஒட்டுமொத்த முதலீட்டு வருமானத்தின் நியம விலகலினால் அளவிடப்படும்.

(44) சீக் Plc எப்போதும் ஆண்டிற்கு ரூபா 6.50 பங்கிலாபம் வழங்கும் முன்னுரிமைப் பங்குகளை வழங்கியுள்ளது. இந்த முதலீட்டிலிருந்து 13% வருமான வீதத்தை பெற விரும்பும் அமல் எனும் முதலீட்டாளர் இப்போது ஒரு பங்கிற்கு செலுத்தவேண்டிய தொகை என்ன?

(a) ரூபா 78/-.

(b) ரூபா 84.50/-

(c) ரூபா 50/-

(d) ரூபா 34.50/-

(45) கீழ்வருவனவற்றுள் மூலதனச் சந்தை பற்றிய **<u>சரியான</u>** கூற்று எது?

(a) பலமானவகை வினைத்திறனின் கீழ் தனிமனிதர் அசாதாரண மிகை இலாபத்தை பெறமுடியும்.

(b) Under weak form efficiency all information contained in past price movements are fully reflected in today’s share market price.

(c) பலமானவகை வினைத்திறனின் கீழ் தனிப்பட்டோர் தகவல்கள் பிரதிபலிக்கப்படமாட்டா.

(d) பலமானவகை வினைத்திறனின் கீழ் அகத்தவர் (Insiders) அசாதரண வருமானம் பெறமுடியும்.

(46) பூரண நேரான இணைவின் (Perfect Positive Correlation) இடர் தொடர்பில் **<u>சரியான</u>** கூற்று எது?

(a) முதலீட்டுத் தொகுதி இடர் முழுமையாக நீக்கப்படலாம்.

(b) இடர்க் குறைப்பினை அடைய முடியாது.

(c) இடரினைக் குறைக்கும்.

(d) பூஜ்ய மட்டத்திற்குக்கூட முதலீட்டுத்தொகுதியின் இடரினை குறைக்க முடியும்.

(47) ‘ஒரு காப்பாவணத்தை மட்டும் கொண்டுள்ள முதலீட்டாளருக்கு ஒழுங்கற்ற இடர் (unsystematic risk) மாத்திரம் தொடர்புபட்டது’. அதற்கான காரணம் என்ன?

(a) மொத்த இடரினை கவனத்திற் கொள்ளவேண்டி உள்ளமை.

(b) ஒழுங்கான இடரினை (Systematic risk) கவனத்திற் கொள்ளவேண்டி உள்ளமை.

(c) இடரினை அளவிட ஒழுங்கற்ற இடர் மாத்திரம் போதாமை.

(d) ஒழுங்கற்ற இடரினை பல்துறைப்படுத்தி நீக்க முடியாமை.

(48) மூலதனச் சொத்து விலையிடல் மாதிரியின் கீழ் (CAPM) தவறான கூற்று எது? ?

- (a) இது முதலீட்டாளர்கள் நீண்டகாலத்திற்கு மாறாமலிருக்கும் இடரற்ற வட்டி வீதத்தில் கடன் பெற அல்லது கடன் வழங்க முடியுமெனும் எடுகோளை அடிப்படையாகக் கொண்டது.
- (b) காப்பாவண வாங்கல் அல்லது விற்றலுக்கு தரகு அறவிடப்படமாட்டாதென கொள்ளப்படும்.
- (c) இடரற்ற வருமான வீதத்தின் மிகப் பொருத்தமான மதிப்பீட்டை இலகுவாக மதிப்பிடமுடியாது.
- (d) CAPM இல் வரிகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(49) எதிர்பார்க்கும் பணவீக்கம் 6%; உண்மை வட்டி வீதம் 2%. பெயரளவு (nominal) வட்டிவீதம் என்ன? What is the nominal interest rate?

- (a) 9.65%
- (b) 3.77%
- (c) 8.12%
- (d) 10.45%

(50) விலகற் குணகம் (coefficient of variation) எதனை குறிக்கின்றது?

- (a) ஒவ்வொரு முதலீட்டினதும் காலப் பெறுமதியை
- (b) முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானத்தை
- (c) ஒரு அலகு வருமானத்திற்கான இடரை
- (d) முதலீட்டுத் தொகுதியொன்றின் நியம விலகலை.

**(50 × 2 புள்ளிகள் = மொத்தம் 100 புள்ளிகள்)**

வினாப்பத்திர முடிவு

---

<u>சூத்திரம்</u>

(1 + பெயரளவு வட்டி வீதம்) = (1 + உண்மை வட்டி வீதம்) × (1 + பணவீக்க வீதம்)